# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2052 ● டிசம்பர் 11, 2021

Weekly E-paper ● December 11, 2021





## மெல்ல நுழையும் இந்தி!

வெற்றிச்செல்வன்

## பாடம் தந்த வேளாண் போராட்டம்!

தலையங்கம்

## எழுவர் விடுதலை ஆளுநர் விரைந்து முடிவெடுக்க வேண்டும்

மதிவாணன்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2052 ● டிசம்பர் 11, 2021 Weekly E-paper ● December 11, 2021


# மாரிதாஸ் கைதும் அண்ணாமலை, சீமான் எதிர்ப்பும்!

**சுப.வீரபாண்டியன்**

இந்திய முப்படைகளின் தளபதி பிபின் ராவத், சில நாள்களுக்கு முன்னால், ஒரு ஹெலிகாப்டர் விபத்தில் காலமானார். அவருடன் பயணித்தவர்களில் ஒருவரைத் தவிர மற்ற 12 பெரும் அவ்விபத்தில் இறந்து போனார்கள்.

அதிர்ச்சியும் வேதனையும் நிறைந்த இச்செய்தி நாடு முழுவதும் துயரத்தைக் கொண்டுவந்துள்ளது. இது இயற்கையான விபத்துதானா அல்லது வேறு சதி வேலைகள் ஏதேனும் உள்ளனவா என்று ஆராய, ஒன்றிய அரசு ஒரு குழுவையும் நியமித்துள்ளது.

இந்நிலையில், வழக்கம்போல் எந்த ஆதாரமும் இல்லாமல், தன் மனம்போன போக்கில் வலையொளியில் பேசக்கூடிய மாரிதாஸ் என்னும் ஒரு நபர், தன் ட்விட்டர் பக்கத்தில், "திமுக ஆட்சியில் தமிழ்நாடு காஷ்மீராக மாறிக்கொண்டிருக்கிறது" என்று பதிவிட்டுள்ளார். அதாவது, பிபின் ராவத் மரணத்திற்குத் திமுக அரசு காரணம் என்பதுபோல் அந்தப் பதிவு அமைந்துள்ளது.

அந்த மாரிதாஸ் உடனடியாகக் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவதூறாகப் பேசுபவர்களின் மீது கைது நடவடிக்கைகள் தொடர்ந்து கொண்டிருப்பதை நாம் அண்மையில் பார்க்கிறோம். கிஷோர் கே சாமி, கல்யாணராமன், சாட்டை முருகன், தட்க்ஷிணாமூர்த்தி ஆகிய நபர்களின் வரிசையில் இப்போது இந்த மாரிதாஸ். இவர்கள் எல்லோருமே பொறுப்பற்றும், ஆதாரமற்றும் பேசும் குணமுடையவர்கள். கண்ணியக் குறைவாகப் பேசுவதிலும், எழுதுவதிலும் தங்களுக்கென்று ஒரு தனி இடத்தைப் பெற்றிருப்பவர்கள்!

கைதாகும் வரையில் வீராதி வீரர்களைப் போல் "முழக்கமிடும்" இவர்கள், கைதாகிச் சிறையில் அடைக்கப்பட்டவுடன், "அன்று எனக்கு காய்ச்சல், உடம்பு சரியில்லை, அந்த உஷ்ணத்தில் உளறி விட்டேன்" என்பதாக, சாவர்க்கர் பாணியில் மனு கொடுப்பார்கள்!



மாரிதாஸ் கைது செய்யப்பட்ட பிறகு, இரண்டே இரண்டு பேர் அதனைக் கண்டித்துப் பொங்கி எழுந்துள்ளனர். ஒருவர் பாஜக அண்ணாமலை. இன்னொருவர், பாஜகவின் புதிய கிளைச் செயலாளர் சீமான்.

சீமானுடன் சேர்ந்து பயணிக்கும் இயக்குனர் களஞ்சியம் கூட இதில் சற்றுப் பின்வாங்கிவிட்டார். அபாண்டமாகப் பழி சுமத்தியிருக்கும் மாரிதாஸ் கைது செய்யப்பட்டது சரிதான் என்றும், குண்டர் சட்டத்திலேயே அவரை அடைக்கலாம் என்றும் கூறியுள்ளார். இந்தக் கைது நடவடிக்கையைக் கண்டிக்கும் அளவுக்குத் தான் அவ்வளவு மோசமான வலதுசாரி இல்லை என்றும் அவர் கூறியிருக்கிறார். ('கொஞ்சூண்டு' வலதுசாரி போலிருக்கிறது).

சாணக்கியா பாண்டே கொஞ்சம் பூசி மெழுகி, வழக்குப் போட்டிருக்கலாம், கைது செய்ய வேண்டியதில்லை என்கிறார்.

அண்ணாமலை ஆர்ப்பரிப்பதை நம்மால் புரிந்துகொள்ள முடிகிறது. சீமான் தன் வேடத்தை இப்படிச் சட்டென்று கலைத்துக் கொண்டதுதான் சற்று வியப்பாக உள்ளது. 'ஜெய்பீம்' பிரச்சினையிலும், அன்புமணியின் வலியையும் நாம் உணர்ந்துகொள்ள வேண்டும் என்று சீமான் 'அருளாசி' வழங்கினார்.

சீமான் கருத்துரிமை பற்றிக் கவலைப்படுகிறார். தான் ஆட்சிக்கு வந்ததும் (!!!), எதிர்க்கருத்து சொல்பவர்களைப் பச்சை மட்டையால் அடித்துத் தோலை உரித்தது விடுவேன் என்று கூறும் ஜனநாயகவாதியான சீமான், கருத்துரிமைக்காக இப்போது கவலைப்படுகிறார்.

தமிழ்நாடு முதலமைச்சர் ஸ்டாலின் பொதுவாக மிக மென்மையாக நடந்து கொள்கிறார். வாக்களித்தவர்கள், வாக்களிக்காதவர்கள் எல்லோருக்குமான அரசு இது என்பதை அடிக்கடி தன் சொல்லாலும், செயலாலும் நினைவுபடுத்துகிறார். எனவே அவர் மென்மையான மனிதராகத்தான் எப்போதும் நடந்து கொள்வார், நாம் என்ன வேண்டுமானாலும் பேசலாம், எழுதலாம் என்று சிலர் நினைக்கின்றனர்.

வேறு சிலர் சொல்கின்றனர் – ரஷ்ய மொழியில் ஸ்டாலின் என்ற சொல்லுக்கு 'இரும்பு மனிதன்' என்று பொருளாம்!

# மெல்ல நுழையும் இந்தி!

**வெற்றிச்செல்வன்**

எப்படியாவது இந்தியைத் தமிழ்நாட்டில் நுழைத்து விட வேண்டும் என்று ஒன்றிய அரசு தொடர்ந்து முயற்சிப்பதும், அதற்காக அவ்வப்போது நூல் (!) விட்டுப் பார்ப்பதும் நாம் அனைவரும் அறிந்த ஒன்றுதான். தற்போது மீண்டும் அந்த முயற்சியை அரங்கேற்றத் துணை போயுள்ளது திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகம்.




கொரோனா காரணமாக இரண்டு ஆண்டுகளாக நடைபெறாமல் இருந்த பல்கலைக்கழகத்தின் 37வது பட்டமளிப்பு விழா அண்மையில் நடைபெற்று முடிந்துள்ளது. இந்த நிகழ்ச்சிக்கான அழைப்பிதழில் ‘ஆசாதி கா அம்ரித் மகோத்சவ்’ என்ற இந்திச் சொற்றொடர் ஆங்கிலத்தில் இடம்பெற்றுள்ளது. 75வது விடுதலை நாளை முன்னிட்டு ஒன்றிய அரசால் உருவாக்கப்பட்ட இந்திய விடுதலை நாளுக்கான இலச்சினையில் காணப்படும் வாசகம்தான் இது. இதனை, சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா என்று தமிழக அரசு தமிழாக்கம் செய்து அரசு கடிதங்களிலும் பிற இடங்களிலும் பயன்படுத்தி வருகிறது. இந்நிலையில் ஆங்கில வழியில் இந்தி வாசகம் திணிக்கப்பட்டிருப்பது பரவலான கண்டனங்களை எழுப்பியுள்ளது. விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் செய்தித் தொடர்பாளர் வன்னியரசு இதனைக் கண்டித்துத் தனது ட்விட்டர் பக்கத்தில் பதிவு வெளியிட்டுள்ளார். பாட்டாளி மக்கள் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அன்புமணி ராமதாசும் இதைக் கண்டித்துள்ளார்.




அதேநேரத்தில் பட்டமளிப்பு விழா நிகழ்ச்சியில் பங்கேற்றுப் பேசிய தமிழ்நாடு உயர்கல்வித்துறை அமைச்சர் பொன்முடி அவர்கள், அதே நிகழ்ச்சியில் மேடையில் இருந்த ஆளுநரிடம், “தமிழ்நாட்டில் இருமொழிக் கொள்கை நடைமுறையில் உள்ளதாகவும், ஆளுநர் இருமொழிக் கொள்கைக்கு ஆதரவு அளிக்க வேண்டும் என்றும், மாணவர்கள் ஒரு மொழியை விருப்பப்பட்டால் படித்துக் கொள்ளலாம், ஆனால் அந்த மொழி திணிக்கப்படக் கூடாது” என்றும் பேசியிருக்கிறார். 1965 மொழிப்போர் காரணமாகத் தமிழ்நாட்டில் இருந்து விரட்டி அடிக்கப்பட்ட இந்தி புறவாசல் வழியாக மீண்டும் தமிழ்நாட்டிற்கு உள்ளே நுழைவதற்கு இடம் பார்த்துக் கொண்டுள்ளது. அறிஞர் அண்ணாவின் வழியில், முத்தமிழறிஞர் கலைஞரின் வழியில் பீடுநடை போடும் திராவிட முன்னேற்றக் கழக அரசு இந்தி நுழைவதற்கு எந்த வகையிலும் இடம் கொடுத்து விடக்கூடாது என்பதே தமிழ் ஆர்வலர்கள் மற்றும் திராவிட இயக்க உணர்வாளர்கள் விருப்பமாக உள்ளது. தமிழ்நாடு அரசு இதனை உணர்ந்து செயல்பட வேண்டும். ●

## திராவிடம் எனும் சொல்!

**பேராசிரியர் ரமேஷ் தங்கமணி**



சான்றோர் அனைவரையும் ஈர்க்கும்
சனாதனிகளுக்கோ உடல் வேர்க்கும்

சாதியப் பிரச்சினை தீர்க்கும்
பகுத்தறிவை மனதில் வார்க்கும்

பெண்ணடிமைத்தனத்தைப் பெயர்க்கும்
சாதிய அவலம் தகர்க்கும்

இளையோர் மனதினை ஈர்க்கும்
இனமானத்தைக் கொணர்ந்துசேர்க்கும்

உறவுக்குக் கை கோர்க்கும்
உரிமை பெற வழிபார்க்கும்

சுயமரியாதை கொண்ட எவர்க்கும்
நம்பிக்கை நெஞ்சில் துளிர்க்கும்

**கருஞ்சட்டைப் பதிப்பகம்**

கருஞ்சட்டைப் பதிப்பக வெளியீடுகளும், தோழர் சுபவீ, பேராசிரியர் அருணன் ஆகியோர் எழுதியுள்ள பிற நூல்களும் இப்போது இணையத்தள விற்பனையில் உள்ளன. இந்தியாவின் எந்தப் பகுதியிலிருந்தும் நூல்களை இணைய வழியில் அனைவரும் பெற்றுக்கொள்ளலாம். வங்கி அட்டைகள் மூலமாகவோ, அல்லது வீட்டிற்குப் புத்தகம் வரும்போது பணம் செலுத்தியோ நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

*இணையதள முகவரி:*
karunchattaibooks.com

தொடர்புக்கு
120 என்.டி.ராமாராவ் தெரு, ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை - 600 024

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## பாடம் தந்த வேளாண் போராட்டம் !

ஒன்றியத்தின் தலைநகர் தில்லியில் 15 மாதங்களாக வீரத்துடனும், நெஞ்சுறுதியுடனும் போராடி வந்த வேளாண் பெருங்குடி மக்கள், 11-12-21 அன்று தங்கள் போராட்டத்தைத் திரும்பப் பெற்றுக் கொண்டனர்.

வேளாண் திருத்தச் சட்டம் என்று கூறி ஒன்றிய அரசு மூன்று சட்டங்களை நிறைவேற்றியது.

இச்சட்டத்தைப் பற்றிச் சுருக்கமாகச் சொல்வதென்றால் வேளாண் விளைபொருள்களின் ஆதார விலையை நீர்த்துப் போகச் செய்து, சந்தைகளை முடிவுக்குக் கொண்டு வந்து, “கார்ப்பரேட் “ பெருநிறுவனங்களிடம் வேளாண் மக்களைக் கையேந்தும் நிலைக்குத் தள்ளிவிடும் நிலையை ஏற்படுத்தும் சட்டமாக இருந்தது.

இதனால் பஞ்சாப், அரியானா, உத்தரப்பிரதேசத்தைச் சேர்ந்த வேளாண் மக்கள், 40 வேளாண் சங்கங்களைச் “ சம்யுக்தா கிஷான் மோர்ச்சா “ என்ற சங்கத்தின் கீழ் கொண்டு வந்து 26-11-2020 முதல் வலிமையான போராட்டத்தை முன்னெடுத்தனர்.

போராட்டம் தொடர்ந்த நிலையில் 11 கட்டப் பேச்சுவார்த்தைகள் நடந்தும் எவ்விதப் பயனும் ஏற்படவில்லை.

இப்போராட்டத்தை அதிகாரத்தால் அடக்க முயன்றது மோடி அரசு. பிரதமர் என்ற முறையில் இதுவரையில் ஒரு தடவை கூட மோடி, வேளாண் போராட்டத் தலைவர்களை அழைத்துப் பேசவில்லை.

மக்களின் ஆதரவு இவ்வேளாண் போராட்டத்திற்குக் கூடுதல் வலிமையைச் சேர்த்தது.

வேளாண் மக்கள் உறுதியுடன் தூக்கிப் பிடித்த போராட்டத்தின் முன் நிற்க முடியாத மோடி அரசு, தோல்வியின் விளிம்பில் நின்று கொண்டு 19-11-2021 அன்று மூன்று வேளாண் சட்டங்களையும் திரும்பப் பெறுவதாக அறிவித்தது. வேளாண் மக்களின் கோரிக்கைகளை ஏற்பதாக எழுத்துப் பூர்வமாகக் கடிதம் கொடுத்துள்ளது ஒன்றிய அரசு. அதனால் போராட்டத் தலைமைச் சங்கம் போராட்டத்தைக் கைவிடுவதாக அறிவித்தது.

போராட்டத் தலைமைச் சங்கமான சம்யுக்தா கிஷான் மோர்ச்சா சார்பில் பேசிய குர்னாம்சிங் சாதுனி “ஒன்றிய அரசு எங்களின் எல்லாக் கோரிக்கைகளையும் நிறைவேற்றாவிட்டால் ஜனவரி 15 ம் தேதி நாங்கள் கூடிப் பேசி மீண்டும் போராட்டத்தை உறுதியுடன் முன்னெடுப்போம்” என்று கூறியிருக்கிறார்.

மக்கள் ஒன்றிணைந்தால் அதிகாரம் தூள்தூளாகும் என்பதைக் காட்டி விட்டார்கள் வேளாண் மக்கள்.

இதிலிருந்து மோடி அரசு பாடம் கற்றுக் கொள்ள வேண்டும் !

ஆசிரியர்:
**சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்
**எழில்.இளங்கோவன்**

ஆசிரியர் குழு:
**உதயகுமார்**
**வெற்றிச்செல்வன்**
**சாரதா தேவி**

வெளியீடு:
**திராவிட இயக்கத் தமிழர் பேரவை**

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com

மின் அஞ்சல்:
karunchattai@gmail.com

டுவிட்டர்: suba_vee

தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை– 600 024,

தொலைபேசி: 044-2472 6408

## கருஞ்சட்டைப் பதிப்பகம் மூன்று நூல்கள் வெளியீட்டு விழா!

## 4.12.2021 முத்தமிழ் பேரவை,சென்னை-20
















# எழுவர் விடுதலை

## ஆளுநர் விரைந்து முடிவெடுக்க வேண்டும்

**மதிவாணன்**

உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடு என்று கூறிக்கொள்ளும் இந்த நாட்டில், உண்மையில் ஜனநாயகத்தின் நிலை என்ன என்பதைப் பேரறிவாளன் உள்ளிட்ட ஏழு பேர்களின் விடுதலை குறித்த தமிழ்நாடு சட்டப்பேரவை ஒருமனதாக நிறைவேற்றிய தீர்மானத்தின் நிலை வெளிச்சம் போட்டு காட்டியிருக்கிறது.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் நீண்ட காலம் சிறையில் இருக்கும் பேரறிவாளன், நளினி, முருகன், , சாந்தன், ராபட் பயஸ், ஜெயக்குமார் மற்றும் இரவிச்சந்திரன் ஆகிய எழுவர் விடுதலை குறித்து தமிழ்நாடு சட்டமன்றம் ஒருமனதாக நிறைவேற்றிய தீர்மானத்தைக் குடியரசுத் தலைவர் எந்தக் காரணமும் சொல்லாமல் நிராகரித்து இருக்கிறார். ஏன் நிராகரித்தார் என்ற காரணம்கூட இது வரை தெரிவிக்கப்படவில்லை. சிம்லாவில் நடந்த பேரவைத் தலைவர்கள் மாநாட்டில், மாநில அரசின் பேரவைத் தீர்மானங்களைக் குடியரசுத் தலைவர் நிராகரிக்கும்போது எந்த விளக்கமும் தரப்படவில்லை என்று தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவர் அப்பாவு அவர்கள் பேசியிருப்பது கவனிக்கத் தக்கதாகும்.

பேரறிவாளன் தனது விடுதலை குறித்து உச்சநீதிமன்றத்தில் தொடுத்த வழக்கு அண்மையில் விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதி, பேரறிவாளனின் விடுதலை குறித்த முடிவை மாநில சட்டப்பேரவைத் தீர்மானத்தின் அடிப்படையில் ஆளுநரே முடிவெடுக்கலாம் என்று உச்சநீதிமன்றம் ஏற்கனவே தன் தீர்ப்பில் கூறியிருப்பதைச் சுட்டிக்காட்டினார். அத்துடன் ஆளுநர், பேரறிவாளன் உள்ளிட்ட எழுவரின் விடுதலை குறித்து இதுவரை ஏன் முடிவெடுக்கவில்லை என்று கேட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்தப் போக்கு மாநில அரசின் உரிமையை ஆளுநர் மூலம் கட்டுப்படுத்திப் பன்முகத்தன்மையைச் சிதைப்பதாக இருக்கிறது.

நாட்டில் உள்ள அனைத்து மாநில அரசுகளுடனும் இணைந்து ஒன்றிய அரசு வலிமையான ஜனநாயக நாட்டைக் கட்டமைக்க வேண்டும். ஒற்றை அதிகாரக் குவியலை நோக்கிச் செல்வது என்பது பலவிதமான மக்கள் வாழும் இந்த நாட்டில், அவரவர் உரிமையைக் கோருவதில் மேலும் சிக்கலையே ஏற்படுத்தும். கூட்டாட்சித் தத்துவத்திற்கு எதிராக நகர்வது என்பது நாட்டை மேலும் பலகீனப்படுத்துமே ஒழிய வலிமை சேர்க்காது.



முருகன் பேரறிவாளன் சாந்தன்
நளினி ரவிச்சந்திரன் ராபர்ட் பயாஸ் ஜெயக்குமார்

**“ நாட்டில் உள்ள அனைத்து மாநில அரசுகளுடனும் இணைந்து ஒன்றிய அரசு வலிமையான ஜனநாயக நாட்டைக் கட்டமைக்க வேண்டும். ஒற்றைக் அதிகாரக் குவியலை நோக்கிச் செல்வது என்பது பலவிதமான மக்கள் வாழும் இந்த நாட்டில், அவரவர் உரிமையைக் கோருவதில் மேலும் சிக்கலையே ஏற்படுத்தும். கூட்டாட்சித் தத்துவத்திற்கு எதிராக நகர்வது என்பது நாட்டை மேலும் பலகீனப்படுத்துமே ஒழிய வலிமை சேர்க்காது. ”**

சிறையில் இருக்கும் எழுவர் குறித்த வழக்கில், உச்சநீதிமன்றம் மாநில அரசே 161 சட்டப்பிரிவின் கீழ் முடிவு எடுக்க முடியும் எனத் தெளிவுபடுத்தி இருக்கிறது. தமிழ்நாடு சட்டமன்றத்தின் ஒருமனதான தீர்மானத்திற்கு ஆளுநர் விரைவில் முடிவெடுக்க வேண்டும். ஆளுநருக்கு என்று சில உரிமைகள் கொடுக்கப்பட்டுள்ளன. மக்களாட்சியில் மக்களால் தேர்ந்து எடுக்கப்பட்ட மாநில அரசானது தான் எடுக்கும் முடிவிற்கு, ஒன்றிய அரசால் நியமிக்கப்படும் ஆளுநர் கட்டுப்படவேண்டும். எழுவர் விடுதலை குறித்த பேரவைத் தீர்மானத்தைக் குடியரசுத் தலைவருக்கு அனுப்பி இருக்கத் தேவையில்லை. அவரே முடிவெடுத்திருக்க வேண்டும்.

கிட்டத்தட்ட 30 ஆண்டுகளாகச் சிறையில் உள்ள எழுவரை மனிதாபிமான அடிப்படையில் விடுதலை செய்வதில் இனியும் தாமதம் செய்யக் கூடாது. இதுபோன்ற தாமதம், மனித உரிமைக்கு எதிரானது. அகிம்சை வழியில் ஆங்கில அரசை வெளியேற்றப் போராடிய காந்தியார் கொலை வழக்கில் ஆயுள் தண்டனைப் பெற்ற கோபால் கோட்சே (பார்ப்பனர்) 14 ஆண்டுகளில் விடுதலை செய்யப்பட்டான். ஆனால் இங்கு 30 ஆண்டுகள் எட்டும் நிலையிலும் விடுதலை சாத்தியப்படவில்லை.

ஏன் இந்த வேறுபாடு?

எழுவரை விடுதலை செய்ய வேண்டும். அல்லது காரணத்தைச் சொல்ல வேண்டும், ஆளுநர். •

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian